செய்தி வெளியீடு எண்:857 நாள்:14.10.2008

# செய்தி வெளியீடு – 14.10.2008

## 2007–2008ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணை

2007–2008ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கக் கோரி தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் (325/டுளுகு) உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் அரசுக்கு கோரிக்கை சமர்ப்பித்திருந்தன.

2007–2008ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள், பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட, 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 11.67 சதவீதம் கருணைத் தொகை, ஆக மொத்தம் 20 சதவீதம் வழங்கவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு முதன் முறையாக இந்த ஆண்டு ரூ.1000/– கருணைத் தொகை வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், 16,340 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப்பணியாளர்கள், பருவகாலப் பணியாளர்கள் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு போனசும், கருணைத் தொகையும் ரூ.10.76 கோடி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் 13,226 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ரூ.1.32 கோடி கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9